

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் சென்னை பெருநகர காவல் துறையின் பயன்பாட்டிற்காக 74 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 85 இருசக்கர வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ரூ.74 இலட்சம் செலவில் நவீன தொழில் நுட்பத்துடன்

# சென்னை பெருநகர காவல்துறைக்கு 85 இரு சக்கர வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜுலை 25-**

**சென்னை பெருநகர காவல் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.74 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 85 இருசக்கர வாகனங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2024) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் சென்னை பெருநகர காவல் துறையின் பயன்பாட்டிற்காக 74 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 85 இருசக்கர வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் அரசு செயல்படுத்தி வருகிறது.

**கழக அரசு பொறுப்பேற்றத்திலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க அனைத்து காவல் உட்கோட்டங்களிலும் மகளிர் காவல் நிலையங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு மே 2021 முதல் தற்போதுவரை 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் குறிப்பாக பெண்கள், அவசர காலங்களில் காவல்துறையின் உதவியை உடனடியாக பெறும் பொருட்டு, 60க்கும் மேற்பட்ட சிறப்பம்சங்களுடன் கூடிய "காவல் உதவி" செயலி தொடங்கி வைக்கப்பட்டது. காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், குழந்தைகள் மீதான குற்ற நடவடிக்கை தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஒளி, ஒலி கட்டமைப்புடன் கூடிய 2 பல்நோக்கு பயன்பாட்டு விழிப்புணர்வு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்து 50 ஆண்டு நிறைவு பெற்றதையொட்டி நடைபெற்ற பொன் விழாவில் சிறப்பு தபால் உறை வெளியிடப்பட்டு, பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அவள் (*AVAL Avoid Violence Through Awareness and Learning*) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**சென்னை பெருநகர காவல் துறையின் பயன்பாட்டிற்காக 85 புதிய இருசக்கர வாகனங்கள் வழங்குதல்**

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக 32 கோடியே 53 இலட்சத்து 71 ஆயிரம் செலவில் 323 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையில், கழிவு செய்யப்பட்ட காவல் துறை வாகனங்களுக்கு பதிலாக ரோந்துப் பணிகளை மேற்கொள்ள 200 புதிய இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 40 BAJAJ Pulsar இரு சக்கர வாகனங்கள் 39 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபாய் செலவிலும், 45 TVS Jupiter இருசக்கர வாகனங்கள் 34 இலட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாய் செலவிலும், என மொத்தம் 85 இருசக்கர வாகனங்கள் 74 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த இரு சக்கர வாகனங்கள், சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ரோந்து பணி மேற்கொண்டு குற்றங்கள் நிகழாமல் கண்காணித்தல், சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரித்தல், பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துதல், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதி யோர்களின் பாதுகாப்பில் தனிக் கவனம் செலுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படும்.

நடப்பு நிதி ஆண்டில் (2024-2025) தமிழ்நாடு காவல்துறைக்கு 46 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 840 வாகனங்கள் வழங்கப்பட உள்ளன. இவற்றில் சென்னை பெருநகர காவல்துறைக்கு மட்டும்

6 கோடியே 93 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் 24 வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் சார்பில் 50 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை 941 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 10 நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களது மரபுரிமையினருக்கு கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மூக்கு கண்ணாடி நிதியுதவி, இயற்கை மரணம் / ஈமச்சடங்கு நிதியுதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.ஆர். காந்தி, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஜி. விமலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.50 லட்சம் மதிப்பில் 941

# நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நல உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜுலை 25-

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் சார்பில் 50 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை 941 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.7.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் சார்பில் 50 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை 941 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 10 நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களது மரபுரிமையினருக்கு கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மூக்கு கண்ணாடி நிதியுதவி, இயற்கை மரணம் / ஈமச்சடங்கு நிதியுதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கி, நாட்டுப்புறக் கலைகளை வளர்க்கவும், மக்களிடையே அக்கலைகளை பிரபலப்படுத்தவும், இக்கலைகளை அழியாமல் பாதுகாத்து எதிர்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் 2007ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வாரியத்தின் வாயிலாக, வாரிய உறுப்பினர்களாக உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை போன்ற பல்வேறு வகையான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் தற்போது 55,910 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர் களாக உள்ளனர். இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை 1023 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு 51 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2023-24ஆம் ஆண்டிற்கான கலை மற்றும் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் அனைத்து நலத் திட்டங்களையும் தொய்வின்றி செயல்படுத்திடும் வகையில் நலத்திட்டத்திற்கான நிதி மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் உள்ளிட்ட நிருவாகச் செலவுகளுக்கான தொடர் ஒதுக்கீட்டு நிதியினை ரூ.35 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி ரூபாயாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் நல உதவிகள் கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியான 941 நாட்டுப்புறக் கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களது மரபுரிமையினருக்கு கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மூக்கு கண்ணாடி நிதியுதவி, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிதியுதவிக்கான 1 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர்

டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர்

வாகை சந்திரசேகர், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.ஆர். காந்தி, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஜி. விமலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கை

# தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் வன்மத்தின் வெளிப்பாடாக உள்ளது!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

**சென்னை, ஜுலை 25-**

**ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன் குமார் அறிக்கை வருமாறு:-**



ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் என்பது நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான பட்ஜெட் அல்ல. ஆதரவுக் கட்சிகளை சமாதானப்படுத்தி, ஆட்சியை தக்க வைத்து, பதவியை பாதுகாத்துக் கொள்ளும் பட்ஜெட் ஆகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நேற்று முன்தினம் தாக்கல் செய்த பட்ஜெட்டில் தமிழ்நாடு என்கிற பெயரையே உச்சரிக்காதது மாபெரும் வரலாற்று துரோகமாகும். தமிழ்நாடு ஒரு நாளும் நிர்மலா சீதா ராமனையும் அவரை நிதியமைச்சராக வைத்துள்ள மோடியையும் மன்னிக்காது.

நியாயமான, நடுநிலையான ஓர் அரசு என்பது வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களையும் சமமாக கருதி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தான் இலக்கணமாகும். 2021 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பொழுது அவர் தெரிவித்த முதல் அறிவிப்பு, வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் நான் முதலமைச்சராக இருந்து பணியாற்றுவேன் என்பதாகும்.

இதனை பிரதமர் மோடி கற்றுக் கொண்டதாக தெரியவில்லை. தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சிக்கு இடமில்லை என்பதை தெரிந்து கொண்டு தங்களை புறக்கணிக்கும் மக்களை பழி வாங்கும் நோக்கோடு இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு எதையுமே செய்திடவில்லை.

பிற மாநிலங்களில் பேரிடர் வராமல் தடுப்பதற்கு 11,500 கோடியை ஒதுக்கியுள்ள நிர்மலா சீதாராமன், தமிழ்நாட்டில் மிகப்பெரும் பாதிப்பிற்குள்ளான பேரிடருக்கு தமிழ்நாடு அரசு கோரிய நிதியை ஒதுக்குவதற்கு மனமில்லை. நடைபெற்று வருகிற சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யாதது, புதியத் திட்டங்களை அறிவிக்காதது இவை எல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு மோடி அரசு செய்யும் அப்பட்டமான துரோகமாகும்.

இளைஞர்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் குவிந்து கிடப்பதாக இந்த நிதிநிலை அறிக்கை குறித்து பிரதமர் பெருமிதம் கொள்கிறார். ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்று அறிவித்து ஆட்சி பொறுப்பை ஏற்ற மோடி இதுவரை எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கினார் என்று கூற முடியுமா? இப்போது ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு பயிற்சி, வேலை; அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20 லட்சம் இளைஞர்களுக்கு வாய்ப்பு என்று கூறிவிட்டு இதன் மூலம் இளைஞர்களுக்கு எண்ணற்ற வாய்ப்பு என்று வாய்ஜாலம் காட்டுகிறார் மோடி.

தொடர்ந்து போராடிவரும் இந்திய நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண எந்த ஒரு முறையான அறிவிப்பும் இல்லை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி யிலும் மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதிலும் பெரும்பங்காற்றி வரும் கட்டுமானத் துறையை ஊக்கப்படுத்துவதற்கு எந்த அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. கட்டுமானத் துறைக்கான ஜி.எஸ்.டி.யை குறைப்பது, கட்டுமானப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவது, இதன் மூலம் இந்த துறையை ஊக்கப்படுத்துவதற்கு மோடி அரசு அக்கறை செலுத்தவில்லை. மொத்தத்தில் நிர்மலா சீதாராமன் அவர்கள் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கை வன்மத்தின் வெளிப்பாடாக உள்ளது.

இவ்வாறு பொன்குமார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



நெல்லை மாநகராட்சி தச்சை மண்டலம் 29 வார்டு மீனாட்சிபுரத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள அங்கன்வாடி மைய கட்டிட பணிக்கு மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். உடன் மேயர் (பொறுப்பு)ராஜு, பாளை மண்டலத் தலைவர் பிரான்சிஸ், மாநகராட்சி வரி விதிப்பு குழு தலைவர், மாநகர துணைச் செயலாளர் சுதா மூர்த்தி, மாமன்ற உறுப்பினர் டாக்டர் சங்கர், வட்டக் கழக செயலாளர் தென்கரை முத்து, சிவசுப்பு, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் காசி மணி, கால்வாய் துரை பாண்டியன், சாமுவேல், சதீஷ் ஆகியோர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்!

# மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாம் - மக்களிடம் கோரிக்கை மனுக்கள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப் பாண்டியன் பெற்றனர்!

புதுக்கோட்டை, ஜுலை 25-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மழையூர் கிராமம், முத்து லெட்சுமி திருமண மஹாலில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா, தலைமையில் 23.07.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்கள்.

பின்னர், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், பயனாளிக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-


தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள் என்றார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை. முத்துராஜா, உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்குகேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பே. மாரி அய்யா

**ஜுலை 25 (2020)**



கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்" என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் "மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா" என்றும் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**